# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2040 (மார்கழி-தை) ஜனவரி 2010 ஏர்-25, உழவு-1, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
கே.ஆர்.பி.மோகன்
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

| | |
|---|---|
| "வெள்ளி விழா இல்லம்"<br>34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014.<br>Ph : 28351244<br>28352744 | "கொங்கு நாடு இல்லம்"<br>27, அம்மையப்பன் தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014<br>Ph : 28350432 /<br>28353214<br>Fax : 044-28351244 |

| | |
|---|---|
| தலைவர் | : கே.ஆர்.பி.மோகன் |
| துணைத்தலைவர் | : ஈ.ஆர்.ஈஸ்வரன்<br>பி.சென்னியப்பன் |
| செயலாளர் | : பரணி கே. பாலசுப்பிரமணி |
| இணைச்செயலாளர் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>கே.சி.பிரபாகரன் |
| பொருளாளர் | : ஆர். செல்வராஜ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| எம். பொன்னுசாமி | கே.கந்தசாமி |
| கே.ஏ.கணபதி | பி.ரவி |
| கே.ராஜாமணி | பி.இராமசாமி |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.கே.ஈஸ்வரமூர்த்தி |
| ஆர். சண்முகவேல் | Dr.டி.எஸ்.செல்வராஜ் |
| மு. கார்த்திக் | Dr.எஸ்.அசோகன் |
| கே.கே. ரமேஷ் | N.பாலசுப்பிரமணியம் |
| ஜெ.ஆனந்த் | பி.அருள் |
| வி.பி.வீரப்பன் | எஸ்.சிவசாமி |
| ஆர்.இளங்கோ | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| கே. வரதராஜன் | உத்தமி பொன்னுசாமி |

## இந்த இதழில்

| | | |
|---|---|---|
| பொருளடக்கம் | - | 1 |
| தலையங்கம் | - | 2 |
| செயலாளர் வேண்டுகோள் | - | 3 |
| படுகளம் | - | 5 |
| குழந்தை உளவியலும் மனித மனமும் | - | 8 |
| சில தகவல்கள் | - | 11 |
| ஈரோடு | - | 12 |
| கோயம்புத்தூர் | - | 15 |
| வானம் தொடலாம் வாங்க | - | 17 |
| வருந்துகிறோம் | - | 20 |
| சீட்பெல்ட் அணியவேண்டும் | - | 21 |
| இளம் சாதனையாளர் | - | 23 |
| வாழ்த்துகிறோம் | - | 24 |
| மணமகள் தேவை | - | 25 |
| மணமகன் தேவை | - | 29 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு - கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பார்ந்த கொங்கு சொந்தங்களே !



வணக்கம். 2009 ம் ஆண்டில் அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவின் தாக்கம் நமது நாட்டிலும் வெகுவாக இருந்தது. குறிப்பாக, ஏற்றுமதித் துறையில் இந்தப் பின்னடைவை நன்கு உணர முடிந்தது.

கடந்த இரண்டு மாதங்களாக தொழில்துறையில் முன்னேற்றம் காணப்படுகிறது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் இந்தியப் பொருளாதாரம் நல்ல வளர்ச்சி அடையும் என்று பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். நமது கொங்கு சொந்தங்கள் பொருளாதாரப் பின்னடைவால் பெற்ற அனுபவங்களை மூலதனமாக்கி தொழில் துறையிலும், விவசாய, வியாபாரத் துறையிலும் வரும் ஆண்டுகளில் மிகப்பெரிய சாதனைகள் படைக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

உலகெங்கிலும் இருக்கும் நமது கொங்கு சமுதாய இளைஞர்கள் மின் அஞ்சல் மூலம் (KVG yahoo.group) கொங்கு சமுதாயத்தைப்பற்றியும், அதன் தற்போதைய நிலை, எதிர்காலத் தேவைகள் பற்றியும் செய்திகளைப் பகிர்ந்து கொண்டு கருத்துப் பரிமாற்றங்கள் செய்து வருவதை நீங்கள் அறிவீர்கள். சிங்கப்பூரில் இருக்கும் நமது சொந்தங்கள் டிசம்பர் 25ம் தேதி அன்று 7வது முறையாக நேரில் சந்தித்து உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டதை அறிந்து மகிழ்கிறேன்.

அனைத்து கொங்கு சொந்தங்களுக்கும் எனது இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்
நன்றி, வணக்கம்.

திரு.கே.ஆர்.பி.மோகன்
தலைவர்

❖❖❖❖

# செயலாளர் வேண்டுகோள்

அன்பார்ந்த கொங்கு சொந்தங்களே !



சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ஆரம்பித்து 34 ஆண்டுகள் நிறைவு அடைந்துள்ள நிலையில், 2010 புத்தாண்டில் அடியெடுத்து வைக்கிறோம்.

தமிழகத் தலைநகரம் சென்னைக்கு வெளியூர்களிலிருந்து வரும் கொங்கு சொந்தங்களும், சென்னையில் பணியாற்றும் மகளிர் மற்றும் மாணவிகளும் தங்குவதற்கு அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன அறைகள் கொண்ட வெள்ளிவிழா இல்லம் மற்றும் கொங்குநாடு இல்லம் ஆகிய இரண்டு அழகிய கட்டிடங்களை உருவாக்கியது, வசதியற்ற கொங்கு சமுதாய மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையளித்து வருவது, கொங்கு சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள, பல்வேறு துறைகளில் சாதனைகள் படைத்தோர்க்கு விருதுகள் வழங்கி வருவது, பத்தாவது மற்றும் பன்னிரண்டாவது வருப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி வருவது, ஒவ்வோர் ஆண்டும் குடும்பவிழாவை மிகச்சிறப்பாக நடத்தி வருவது, வேலைவாய்ப்பு மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்தி வருவது, மாணவர்களுக்கும், மகளிருக்கும் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பல்வேறு போட்டிகள் நடத்தி அவர்களை ஊக்குவிப்பது, உறுப்பினர்கள் அனைவருக்கும் இலவசமாக ‘செய்திமடல் மாத இதழை அனுப்பி, அதன் மூலம் கொங்கு சமுதாயச் செய்திகளையும், திருமண உறவுகள் ஏற்பட மணமகன், மணமகள் தேவைகளையும் அனைவருக்கும் கொண்டு செல்ல வழி வகை செய்துவருவது, கொங்கு சமுதாய வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டு வருவது, கொங்கு மாவீரன் தீரன் சின்னமலை சிலைக்கு பிறந்த நாள் மற்றும் நினைவு நாளில் மாலையணிவித்து மரியாதை செய்து வருவது போன்ற பல நல்ல காரியங்களைச் சங்கம் செய்து வருகிறது என்பதை அனைவரும் அறிவர்.

இருப்பினும் இன்னும் நிறைய செய்ய வேண்டியுள்ளன. வசதியில்லாததால் விருப்பப்பட்ட படிப்பைப் படிக்க முடியவில்லை என்று சொல்லும் நிலை எந்தவொரு கொங்கின மாணவனுக்கும் இருக்கக் கூடாது என்று சொல்லும் அளவுக்கு, தேவைப்படும் அனைத்து மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகை அளிப்பது அவசியம். கொங்கு சமுதாயம் முன்னேற கல்விதான் ஒரே வழி. இதற்காக சங்கம் தன்னுடைய நிதிநிலையை உயர்த்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

சங்கத்தின் சாதனைகளில் ஒரு மைல்கல்லாக புதிய விருந்தினர் இல்லம் உருவாகி வருகிறது. விரைவில் பணிகள் நிறைவுற்று இதன் திறப்பு விழா நடைபெற உள்ளது. இதற்காக நன்கொடையளித்த பெருந்தகையாளர்களுக்கு சங்கம் சார்பில் எனது நெஞ்சார்ந்த நனிறியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை நன்கொடையளிக்காதவர்கள் புத்தாண்டில் முதல் நல்ல காரியமாக குறைந்தது ரூ. 1000/- அனுப்ப அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொங்கு சொந்தங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களையும், இனிய பொங்கல் நல்வாழ்த்துக்களையும் சங்கம் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

திரு. பரணி கே.பாலசுப்பிரமணி
செயலாளர்

❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டிட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 38,82,942 |
| 813 | | Precision Equipments Pvt. Ltd., | 50,000 |
| 814 | 465 | P.சுப்பிரமணி | 5,000 |
| 815 | 90 | K.சுப்பிரமணியன் | 3,000 |
| 816 | | M.ரகு | 2,000 |
| 817 | | G.S.ராஜேந்திரன் | 2,000 |
| 818 | | R.K.கணேஷ் | 2,000 |
| 819 | 91 | P.சதாசிவம் | 2,000 |
| 820 | 1902 | இளமுருகன் | 2,000 |
| 821 | 2915 | S.ரவிச்சந்திரன் | 2,000 |
| 822 | 9986 | S.ரவிக்குமார் | 2,000 |
| 823 | 775 | லட்சுமிநாராயணன் | 1,001 |
| 824 | 2538 | N.வெங்கடாசலம் | 1,000 |
| 825 | | V.சுப்பிரமணியம் | 1,000 |
| 826 | 284 | S.சுப்பிரமணியம் | 1,000 |
| 827 | 519 | P.A.ஈஸ்வரமூர்த்தி | 1,000 |
| 828 | | K.S.பொன்னுசாமி | 1,000 |
| 829 | | M.சக்திவேல் | 1,000 |
| 830 | | S.காந்தி வரதராஜீ | 1,000 |
| 831 | | K.R.நாகராஜன் | 1,000 |
| 832 | | சண்முக வடிவு L.H | 1,000 |
| 833 | | K.சுதா L.H | 1,000 |
| 834 | | S.சந்திரவதனா L.H. | 1,000 |
| 835 | | V.அபிநயா L.H. | 1,000 |
| 836 | | G.பர்னிதா G.H. | 1,000 |
| 837 | | P.R.நடராஜன் | 1,000 |
| 838 | | V.S.சுபாஷினி L.H. | 1,000 |
| 839 | | சாஞ்சனாநாந்திலட்சுமி L.H. | 1,000 |
| 840 | 150 | R.வெங்கிடசுப்பிரமணியன் | 1,000 |
| 841 | | பர்னிதாசந்துரு L.H. | 1,000 |
| 842 | | M.சாந்தி L.H. | 1,000 |
| 843 | | V.கிருபா L.H. | 1,000 |
| 844 | | N.சிவதார்ஷிணி L.H. | 1,000 |
| 845 | 2549 | ஜெகதீஷ் | 1,000 |
| 846 | 2550 | K.S.ராம்மோகன் | 1,000 |
| 847 | | S.பாலாஜி | 1,000 |
| 848 | 1091 | பாலசுப்பிரமணியம் | 1,000 |
| 849 | 1075 | S.செங்கோடன் | 1,000 |
| 850 | | V.தீபாலட்சுமி L.H. | 1,000 |
| 851 | 2442 | P.ஜெயகுமார் | 1,000 |
| 852 | 2836 | S.சண்முகம் | 1,000 |
| 853 | 3303 | G.வேணுகோபால் | 1,000 |
| | | மொத்தம் | **39,87,943** |

# எப்படி இது நடந்தது ?

சென்ற இதழ் தொடர்ச்சி .....

- பேராசிரியர் ப.க.பொன்னுசாமி

துண்டை வாயில் வைத்து அழுதுகொண்டு எதுவும் பேசாமல் நின்றார் குப்பண்ண கவுண்டர்.

“மறைக்காமச் சொல்லுப்பா” கேட்டார் நல்லசாமிக் கவுண்டர்.

“ஒரு சமயத்தில் திடீர்ன்னு ‘நா ஆடறம்’னு வில்லம்ப வாங்கி ஆடுச்சு செல்லச்சாமி. ரெம்ப நேரம் ஆடிப்போட்டு மயக்கம்போட்டு எல்லாரீம்போல விழுந்துது. படுக்க வெச்சம். நானும் கண்ணயர்ந்திட்ட என்னய முத்தா எழுப்புனா. எந்திரிச்சி செல்லச்சாமியத் தட்டி எழுப்புன. எந்திரிக்கில. பெரட்டிப் பார்த்த. வாயில் நொர தெரிஞ்சுது. ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கிட்டு வந்தம்’’. ஒவ்வொரு வார்த்தையாகத் தேம்பித்தேம்பிச் சொன்னார் குப்பண்ண கவுண்டர்.

‘‘மாரடைப்பா இருக்கலாம்’’. டாக்டர் சொன்னார்.

‘‘அப்ப அந்த ரெண்டு பேருக்கு?” சந்தேகத்துடன் கேட்டான் செங்கண்ணன்.

“போஸ்ட் மார்ட்டம் செஞ்சு பாத்தாத்தாஞ் சரியாத் தெரியும்”, சொல்லிக் கொண்டே தன் அறைக்குப் போனார் டாக்டர். எல்லாரும் அவருடன் அறைக்குப் போனார்கள். டாக்டர் இருக்கையில் அமர்ந்து கொண்டே “இங்க ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்த போதே மூணுபேருக்கும் உயிரில்ல.” மெதுவாகச் சொன்னார்.

எல்லாரும் திடுக்கிட்டு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

“வண்டிய முடிஞ்சு வெரைக்கும் வேகமாத்தா ஓட்டீட்டு வந்தம்! அப்பிடியிருந்தும் காப்பாத்த முடியாமப் போச்சு” குப்பண்ண கவுண்டர் குலுங்கி அழுதார்.

“வண்டீல ஏத்தீல மூணுபேருக்கும் உயிரிருந்துதா?” டாக்டர் கேட்டார்.

“நெலம மோசம்னு கூடயிருந்தவங்க சொன்னாக. உடனே வண்டீல ஏத்தீட்டுப் பொறப்பட்டுட்டம். வேறொண்ணையும் நாங்க கெவினிக்கிலீங்க”, குப்பண்ண கவுண்டர் சொன்னார்.

“பெரியாஸ்பத்திரீலதாம் போஸ்ட் மார்ட்டம் செய்யோணும். அதுக்கு முன்னால போலீசுக்கு ரிபோர்ட் குடுக்கவேணும்”. என்றார் டாக்டர்.

‘போலீஸ்’ என்று டாக்டர் சொன்னதும் எல்லாரும் பேசாமல் இருந்தார்கள். பன்னீர்க்கவுண்டரின் முகம் மேலும் கருத்துப்போனது.

“தயக்கப்படறதுக்கு என்னிருக்குது கண்ணுச்சாமி? எனக்கு அது செரியாப்படுது. டெட்பாடிகள நானும் பாத்தனில்ல? என்னோட சந்தேகத்தப் போக்கிக்கோணுமில்ல?” சொன்ன டாக்டரிடம் “உங்க சந்தேகம் என்னுங்க?” கேட்டார் கண்ணுச்சாமிக் கவுண்டர்.

“மூணு பேருமே ஒரே காரணத்திலதாஞ் செத்திருக்கோணும்! மாரடைப்பு அப்பிடி ஒட்டுக்கா வராது! ஒருவேள நெறையாக் குடிச்சுப்போட்டு ரொம்ப நேரம் ஆடுனதுனாலயும் இருக்கலாம். குடிச்சது எப்படிப்பட்ட சாராயமோ?”

“அது செரியான சந்தேகம்னு எனக்கும் படுதுங்க டாக்டர். செல்லச்சாமி குடிக்கறவந்தான?”

“பழனிக்காரங்களும் குடிக்கறவுங்கதானுங்க” குப்பண்ண கவுண்டர் தழுதழுத்தார்.

“யாரு மேலயும் யாருக்கும் சந்தேகமில்லீன்னா பாடீகள நீங்க எடுத்துக்கிட்டுப் போகலாம்.” டாக்டர் சொன்னார்.

ஒரு கணம் யோசித்துவிட்டு தலையை ஆட்டிச் சம்மதம் தெரிவித்தார்கள். கண்ணுச்சாமிக் கவுண்டரும், பன்னீர்க்கவுண்டரும்.

“இருந்தாலும் போலீசுக்குப் போயி ரிபோர்ட் பண்ணறது நல்லதுன்னு எனக்குப் படுது, பன்னீர்க் கவுண்டரே. ஏன்னா உங்க பங்சன்ல இது நடந்திருக்குது. அல்லாம ரெண்டு அசுலூருக்காரங்க செத்திருக்காங்க” டாக்டர் சொல்ல, மீண்டும் சிறிது நேரம் யாரும் பேசவில்லை.

மனதுக்குள் உதறல் உந்த அதை மறைக்கப் பன்னீர்க்கவுடண்டர் எடுத்துக் கொண்ட முயற்சி பயனளிக்கவில்லை. இருந்தாலும் சுதாரித்துக் கொண்டு “என்ன செய்யலாம்ணா?” நல்லசாமி கவுண்டரைப் பார்த்துக் கேட்டார். அவர் கண்ணுச்சாமிக் கவுண்டரைப் பார்த்தார். அவர் மவுனமாக இருந்தார். பன்னீர்க் கவுண்டரே தொடர்ந்தார்.

“பழனிக்காரங்க விசயத்த நாஞ் சமாளிச்சுக்குவனுங்க, எப்பவும், குடிக்கறவங்கதான; அதுனால அந்தச் காரணத்த ஏத்துக்க வெச்சறலாம்க டாக்டர். நீங்க ஒரு சர்ட்டிபிக்கேட்டுக் குடுத்தா அது போதுங்க”

“இங்கு கொண்டு வாரப்ப உயிரில்ல’ன்னு மட்டும்தான் நா எழுதிக்குடுக்க முடியும். சொல்லிக்கொண்டே தன் முகவரித் தாளை எடுத்து எழுதத் தொடங்கினார் டாக்டர்.

காலை எட்டு மணியாகிவிட்டது. செல்லச்சாமியின் உடலை வண்டியில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டார்கள் கண்ணுச்சாமிக்கவுண்டரும் மற்றவர்களும்.

குப்பண்ண கவுண்டருக்கும் தன்னாசிக் கவுண்டருக்கும் பழனி பெரியண்ண கவுண்டர் குடும்பம் பழக்கப்பட்டிருந்ததால் அவர்களை பழனிக்கு இரண்டு உடல்களையும் எடுத்துச்செல்லவும், அவர்கள் இறந்தவிதம் பற்றிச் சொல்லவும் கேட்டுக்கொண்டார் பன்னீர்க்கவுண்டர்.

வண்டியை ஓட்டிக்கொண்டே கண்ணுச்சாமிக்கவுண்டரிடம் செங்கண்ணன் சொன்னான், “போலீசுக்குப் போயிருக்கோணும்க மாமா”

“இப்பவும் எனக்கு அப்பிடித்தாம் படுது” அழுது கொண்டே சொன்னான் செல்லச்சாமிக்கவுண்டரின் மகன் சுந்தரசாமி.

நல்லசாமிக்கவுண்டரும், கண்ணுச்சாமிக் கவுண்டரும் எதுவும் சொல்லாமல் துக்கத்தில் இருந்தார்கள்.

“சந்தேகப்படறதுக்கு எந்த முகாந்தரமுமில்லை. கூடவே குப்பண்ணனும் இருந்திருக்கறானே?” நல்லசாமிக் கவுண்டர் சொன்னார்.

“செல்லசாமி மாம கொஞ்ச நாளாக் குடிக்கறதே இல்லீங்க” செங்கண்ணன் சொன்னான்.

“போலீசுக்குப் போனாப் போஸ்ட் மார்ட்டம் செஞ்சு என்ன நடந்திருக்கும்னு சொல்லுவாங்க. நெறையாகக் குடிச்சதுனாலயோ, சாராயத்துல என்னமோ இருந்ததுன்னோன்னும் ரெக்கார்டு பண்ணிச் சொல்லுவாங்க. அந்த ரெக்கார்டு நமக்கு வேணுமாக்கும்? குடிக்கறத விட்டுட்டான்’னு நாம சொல்லிக்கலாம். ஊரு நம்பனுமில்ல?” கண்ணுச்சாமிக் கவுண்டர் யோசித்துச் சொன்னார்.

யாரும் ஒன்றும் சொல்லவில்லை. (தொடரும்) ....

❖❖❖❖

## மணமகன் தேவை

வயது 24, செம்பூத்தன், 160 செ.மீ. சிகப்பு, பூரட்டாதி 1, கும்ப ராசி சிம்மலக்னம், செவ்வாய் இல்லை, ராகு/கேது இல்லை, B.E., (CSE) முடித்து சென்னையில் S/W இன்ஜினியராக உள்ளார். இளைய சகோதரி 1 MBBS. தந்தை, கல்லூரிப் பேராசிரியர்; தாயார், அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை. ஊர் - பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.

சொந்த தொழில் அல்லது பணியில் உள்ள, சம படிப்பு மற்றும் அந்தஸ்துள்ள மணமகன் தேவை.

தொடர்ப்புக்கு :
04294-221210, 94427 55006

❖❖❖❖

# குழந்தை உளவியலும் மனித மனமும்

சென்ற இதழ் தொடர்ச்சி .....

- தமிழறிஞர் பெ.தூரன்

## தாயும் தந்தையும்

குழந்தை அழுதுகொண்டு வருகிறது. "ஏன் அழுகிறாய்?" என்று தந்தை கேட்கிறார். "அம்மா மிட்டாய் கொடுக்க மாட்டேங்கறா" என்று தேம்புகிறது குழந்தை.

"அழாதே, நான் கொடுக்கிறேன்' என்று மிட்டாய் எடுத்துக்கொடுக்கிறார் தந்தை. அவர் அதோடு நிற்பதில்லை. "ஏண்டி, ஏன் குழந்தைக்குக் கொடுக்கமாட்டேன் என்கிறாய்?" என்று தாயைக் கேட்கிறார்.

இன்னொரு சமயம் குழந்தை செய்வது தந்தைக்குப் பிடிப்பதில்லை. அதனால் அவருக்குக்கோபம் வந்து விடுகிறது. குழந்தையை அதட்டுகிறார். தாய் ஓடிவந்து, "ஏன் குழந்தையை இப்படி மிரட்டுகிறீர்கள்? அதற்கென்ன தெரியும்?" என்று பரிந்து பேசுகிறாள்.

இப்படித் தந்தையும் தாயும் மாறி மாறிக் குழந்தையிடம் பரிவுகாட்டுவது அதற்குச்சரியான பழக்கத்தையோ, மனப்பான்மையையோ உண்டாக்க உதவி செய்யாது.

குழந்தை அழுகிறதே என்றுமட்டும் நினைக்கிறோமே ஒழிய, அதற்குச் சரியான பழக்கத்தை உண்டு பண்ணுகிறோமா என்பதை அந்தச்சமயத்தில் மறந்துவிடுகிறோம்.

காலையில் எழுந்தவுடன் மிட்டாய் சாப்பிடக்கூடாது என்றால், தாயும் தந்தையும் இதை ஒரே மாதிரி குழந்தைக்கு நயமாக உணர்த்தவேண்டும். தாய் கொடுக்கவில்லை என்று குழந்தை அழுதால், தகப்பன் மிட்டாய் கொடுத்ததனால் குழந்தைக்கு யார் செய்வது சரி என்று தெரியாமல் போய்விடுகிறது. "இந்நேரத்தில் மிட்டாய் சாப்பிடக்கூடாது" என்று தகப்பனும் அதற்குச் சொல்லிச் சமாதானம் செய்திருந்தால் குழந்தை தெளிவாக அதை அறிந்து கொள்ளும்.

இதுமாதிரி விஷயங்களில் தாயும் தகப்பனும் ஒரே மாதிரி நடக்கவேண்டும். ஏதாவது ஒன்றில் தமக்குள் அபிப்பிராயபேதம் ஏற்பட்டாலும் அதைத் தனியாகப் பேசி ஏகோபித்த முடிவுக்கு வரவேண்டும். குழந்தையிடம் நடந்துகொள்ளும் பொழுது இருவரும் ஒரேமாதிரி நடக்கவேண்டும்.

ஒருவர் குழந்தையைக் கண்டிக்கும்போது மற்றொருவர் குழந்தையின் பக்கம் சேர்ந்து கொண்டால், குழந்தைக்கு எவ்வித அறிவும் ஏற்பட முடியாது. உள்ளத்தில் கலக்கமே ஏற்படும்.

அதனால் தாயும் தந்தையும் எந்தச் சமயத்திலும் தங்கள் தீர்மானப்படியே கண்டிப்பாக நடந்து கொள்ளவேண்டுமென்று நான் கூறவில்லை. சில சமயங்களில் குழந்தையின் போக்குக்கு இணங்கவும் வேண்டும். ஆனால் பொதுவாக அன்பு என்னும் சூழ்நிலையிலே குழந்தையை வளர்க்கும்போது தாயும் தந்தையும் ஒரே மனதாக இருந்தால்தான் அவர்களுடைய கடமையில் அவர்கள் பெரியதொரு வெற்றியை அடையமுடியும்.

தாயும் தந்தையும் மாறி மாறிக் குழந்தையின் பக்கம் சேர்ந்து கொள்வார்களானால் அதையே உபயோகப்படுத்திக் குழந்தை தனக்கு இஷ்டமானபடி நடக்க முயலும். இது விரும்பத்தக்கதல்ல.

பெற்றோர்கள் ஒரு மனதாக வாழ்வதால் அவர்களுடைய வாழ்க்கை இன்பகரமாக அமைவதோடு குழந்தையின் வளர்ச்சிக்கும் அது மிகவும் ஏதுவாக இருக்கிறது. மனத்தாங்கல், சச்சரவு முதலியவை இல்லாத, அமைதியும் அன்பும் வாய்ந்த வீடே இள உள்ளத்தில் ஒரு நல்ல உணர்ச்சியை உண்டாக்கும்.

இருவரும் தங்கள் நடத்தை, பேச்சு முதலியவற்றால் குழந்தைக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும். குழந்தை பிறரைப் பார்த்தே பல விஷயங்களைச் செய்து பழகிக்கொள்கிறது. அதிலும் சதா நெருங்கிப் பழகும் தாய் தந்தையரின் செய்கை அதற்கு மிகவும் பிடித்தமானதாக இருக்கும். ஆதலின், குழந்தை சுத்தமாக இருக்க வேண்டுமானால் பெற்றோர்கள் சுத்தமாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அது குழந்தையிடமும் அமையும்.

தாயும் தந்தையும் பிறரிடம் அன்புடனும் மரியாதையுடனும் எப்பொழுதும் நடந்தார்களானால், குழந்தையும் அப்படியே நடக்கும். பேச்சிலும் அப்படித்தான்.

அண்டைவீட்டிலே ஓர் அம்மாள் குடியிருந்தாள். நல்லவேளை, அவள் இப்பொழுது இல்லை. அதனால்தான் தைரியமாக வெளியிடுகிறேன். அவளைக்கண்டால் மற்ற பெண்கள் அதிகமாகப் பயப்படுவார்கள். அவள் போடுகிற சப்தமும் சண்டையும் அவ்வளவு

பீதியை உண்டாக்கிவிட்டன. அவளுடைய மகளுக்குச் சுமார் ஏழுவயது இருக்கும். ஒருநாள் அந்தப்பெண் ஒரு பிச்சைக்காரக்கிழவியைத் திட்டுவதை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அசல் அம்மாள் போலவேதான். அப்பா! அந்தச் சிறுமியின் வாயில் என்ன என்ன வார்த்தைகள் வருகின்றன !

இதனாலேதான் குடும்பவாழ்க்கையில் சில வேளைகளில் வேலைக்காரியையோ மற்றவர்களையோ கடிந்து கொள்ள நேரிட்டால், குழந்தை அந்த இடத்தில் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள்.

தாயும் தகப்பனும் பிறரிடம் மரியாதையாகவும் அன்பாகவும் நடந்து கொள்வது போலவே தமக்குள்ளும் அன்புடனும் மரியாதையுடனும் நடந்துகொள்ளவேண்டும். தகப்பன் தாயிடம் மரியாதையாகவும், அன்புடனும் நடப்பதைக்கண்டு மகனும், மகளும் அவ்வாறு பழகிக்கொள்வார்கள்.

பெற்றோர்கள் தங்கள் உள்ளங்களை ஒருவருக்கொருவர் வெளியிட்டுக்கொண்டு, இருவர் சிரமங்களையும் அறிந்து நடப்பார்களானால், குழந்தையும் அதே மாதிரியான மனப்பான்மையை அடையும். தாயும் தகப்பனும் எந்தக்கஷ்டத்திலும் தனக்கு உற்ற துணையாவார்கள் என்று அதற்குத் தோன்றும்.

அவ்வாறானால் வயது வருகின்ற காலத்தில் குழந்தை தன் மனத்தில் பிறக்கின்ற பலவகையான உணர்ச்சிகளையும் அவர்களிடம் மறைக்காமல் சொல்லி ஏற்றதைச் செய்ய உதவியை நாடும். பெற்றோரிடம் பய உணர்ச்சியோ அலட்சிய புத்தியோ ஏற்படாமல் இளம் பருவம் முதற்கொண்டே தோழமை உணர்ச்சியும், வாழ்க்கையில் தனக்கு வேண்டிய நல்ல யோசனைகளை அவர்களிடம் பெறலாம் என்ற நம்பிக்கையும் குழந்தைக்கு ஏற்பட வேண்டும்.

இது தாய் தந்தையரின் நடத்தையைப் பொறுத்தே இருக்கிறது.

தொடரும்....

❖❖❖❖

# தமிழ்நாடு - சில தகவல்கள்

| | | |
|---|---|---|
| தலைநகரம் | - | சென்னை |
| புவியியலமைவு | - | அட்சரேகை 8⁰.5'-13⁰.35 |
| | - | தீர்க்கரேகை 76⁰.15'-80⁰.35 |
| பரப்பு | - | 1,30,058 ச.கி.மீ |
| மக்கள் தொகை | - | 6,24,05,679 (2001) |
| ஆண்கள் | - | 3,14,00,909 |
| பெண்கள் | - | 3,10,04,770 |
| வளர்ச்சி விகிதம் | - | 11.72% (1991-2001) |
| நகர மக்கள்தொகை | - | 2,74,83,998 |
| கிராம மக்கள் தொகை | - | 3,49,21,681 |
| மக்கள் நெருக்கம் | - | 478 (ஒரு ச.கி.மீக்கு) |
| ஆண் பெண் விகிதம் | - | 986 (1000 ஆண்டுகளுக்கு) |
| எழுத்தறிவு பெற்றோர் | - | 4,05,24,545 |
| ஆண்கள் | - | 2,28,09,662 |
| பெண்கள் | - | 1,77,14,883 |
| எஸ்.சி.மக்கள் தொகை | - | 1,18,57,504 |
| எஸ்.டி.மக்கள் தொகை | - | 6,51,321 |
| மொத்த பணியாளர் | - | 2,78,78,282 |
| சராசரி வாழ்நாள் | - | 70 ஆண்டுகள் (2006-2011) |
| மாவட்டங்கள் | - | 31 |
| வருவாய் பிரிவுகள் | - | 73 |
| தாலுக்காக்கள் | - | 206 |
| ஃபிர்காக்கள் | - | 1,120 |
| வருவாய் கிராமங்கள் | - | 17,292 |
| பஞ்சாயத்து யூனியன்கள் | - | 385 |
| கிராமப்பஞ்சாயத்துகள் | - | 12,618 |
| சிற. கிராமப் பஞ்சாயத்து | - | 562 |
| மாநகராட்சிகள் | - | 10 |
| நகராட்சிகள் | - | 152 |
| சட்டசபை உறுப்பினர் | - | 235 (234 / 1 நியமனம்) |
| லோக்சபை உறுப்பினர் | - | 39 |
| ராஜ்யசபை உறுப்பினர் | - | 18 |

நன்றி : மனோரமா இயர்புக் 2009

❖❖❖❖

# ஈரோடு

| | |
|---|---|
| தலைநகர் | ஈரோடு |
| பரப்பு (ச.கி.மீ) | 8,162 |
| மக்கள் தொகை (2001) | 25,81,500 |
| கிராம மக்கள் தொகை | 13,87,537 |
| நகர மக்கள் தொகை | 11,93,963 |
| மக்கள் நெருக்கம் | 314 |
| ஆண் பெண் விகிதம் | 1,036 |
| எழுத்தறிவு பெற்றோர் | 15,21,955 |
| சாகுபடியாளர்கள் | 2,91,319 |
| விவசாயக் கூலிகள் | 4,80,319 |
| வெப் | www.erode.tn.nic.cin |

**அமைவிடம்** : தெற்கில் திண்டுக்கல் மாவட்டமும், கிழக்கில் சேலம், நாமக்கல், கரூர் மாவட்டங்களும், வடக்கில் கர்நாடக மாநிலமும், மேற்கில் கோயமுத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களும் எல்லைகளாக அமைந்துள்ளன.

**புவியியல் அமைவு** : அட்சரோகை, 10.36-11.58 N : தீர்க்கரேகை 76.49-77.58 E-காலநிலை, அதிகபட்சம் 37.0$^0$ C.குறைந்த பட்சம் 27$^0$C

**வரலாறு** : கோயமுத்தூர் மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தமையால் இதன் வரலாறும் கோயம்புத்தூர் மாவட்டத்துடனேயே பின்னிப் பிணைந்துள்ளது. இரு மாவட்டங்களும் இணைந்த பகுதிகள் சங்க காலத்தில் கொங்கு நாடு என்றழைக்கப்பட்டது. கோசர் எனும் பழங்குடியினரின் தலைநகரான கோசம் புதூரே மருவி பிற்பாடு கோயமுத்தூரானது. பழங்குடியினரிடமிருந்து ராஷ்டிர கூடர்களால் கைப்பற்றப்பட்ட இப்பகுதி, பிற்பாடு ராஜ ராஜ சோழன் காலத்தில் சோழர்களின் ஆட்சிக்குட்பட்டது. சோழர்களின் வீழ்ச்சிக்குப்பின் சாளுக்கியர், பாண்டியர், ஹொய்சாளர்கள் என்று இது பல்வேறு ஆட்சிகளுக்குட்பட்டது.

பாண்டிய அரசுரிமைப்போரில் நுழைந்த தில்லி முஸ்லிம் ஆட்சியாளர்கள் பிற்பாடு இதைத் தமது ஆதிக்கத்திற்குட்படுத்தினர். இவ்வாறு இது மதுரை சுல்தானியத்தின் ஒரு பகுதியானது. பிற்பாடு மதுரை சுல்தான்களிடமிருந்து விஜயநகர ஆட்சியாளர்கள் இதைக்கைப்பற்றினர். சில வருடங்கள் விஜயநகர ஆட்சிக்குப் பின் இது மதுரை நாயக்கர் கைகளிலானது. முத்து வீரப்ப நாயக்கர் மற்றும் திருமலை நாயக்கர் ஆட்சியில் நிகழ்ந்த உள்நாட்டுக்கிளர்ச்சிகள் அரசைப் பலவீனப்படுத்தியது. தொடர்ந்து மைசூர்

ஆட்சியாளர்களின் ஆட்சிக்குட்பட்ட இப்பகுதி (தற்போதைய ஈரோடு மாவட்டப்பகுதி) பிற்பாடு ஹைதர் அலியால் பிடித்தெடுக்கப்பட்டது. 1799 இல் மைசூர் திப்பு சுல்தான் வீழ்ச்சியையடுத்து, பிரிட்டிஷாரால் முடிசூட்டப்பட்ட மைசூர் மகாராஜா இதை பிரிட்டீஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழங்கினார். அன்றிலிருந்து இந்திய சுதந்திரம் வரை பிரிட்டீஷாரின் ஆதிக்கத்திலேயே இருந்தது. கோயமுத்தூர் மாவட்டத்திலிருந்து 1979 ஆகஸ்ட் 31 இல் ஈரோடு மாவட்டம் தனியே உருவாக்கப்பட்டது.

உள்ளாட்சி நிர்வாகம் : மாநகராட்சி-1, ஈரோடு, நகராட்சிகள்-4, தாராபுரம், கோபிச்செட்டிப்பாளையம், சத்தியமங்கலம், பவானி. ஊராட்சி ஒன்றியங்கள்–20 ஈரோடு, மொடக்குறிச்சி, கொடுமுடி, பெருந்துறை, சென்னிமலை, ஊத்துக்குளி, காங்கேயம், வெள்ளக்கோவில், மூலனூர், தாராபுரம், குண்டடம், பவானி, அம்மாப்பேட்டை, அந்தியூர், கோபிச்சொட்டிப்பாளையம், நம்பியூர், தூக்கநாயக்கன் பாளையம், சத்தியமங்கலம், பவானிசாகர், தாளவாடி. பேரூராட்சிகள்-59: ஆண்டியூர், புஞ்சை புளியம்பட்டி, கொண்டம்பட்டி, வீரப்பன் சத்திரம், கொடுமுடி, காங்கேயம், வாக்கம்பட்டி, காசிப்பாளையம் கிழக்கு, நம்பியூர், வாணிப்புத்தூர், பி.அக்ஹாரம், கருமண்டிச்செல்லப்பாளையம், பெருந்துறை, வெள்ளகோயில், சென்னிமலை, கொளத்துப்பாளையம், சிவகிரி, பெரிய சேமூர், சூரியம்பாளையம், ஆப்பக்கூடல், குகலூர், பெரியகொடிவேரி, மூலனூர், வேங்கம்புதூர், கன்னிவாடி, குன்னத்தூர், சூரம்பட்டி, சித்தோடு, பள்ளிப்பாளையம், கோலப்பலூர், பி.மேட்டுப்பாளையம், ஜம்பை, சலங்கைப்பாளையம், காசிப்பாளையம், கே.அவல் பூந்துறை, முத்தூர், காஞ்சிகோவில், மொடக்குறிச்சி, பாசூர், சென்னசமுத்திரம், ஊத்துக்குளி, நல்லம்பட்டி, கலிங்கியம், அரியப்பம்பாளையம், நெருஞ்சிப்பேட்டை, அத்தாணி, வெள்ளோட்டம் பரப்பு, நசியனூர், கொல்லன் கோயில், ருத்திரவதி, கெம்ப நாயக்கன்பாளையம், ஓலக்கடம், அம்மாப்பேட்டை, சின்னக்கம் பாளையம், கீழம்பாடி, அரசலூர் வடுகம்பட்டி, பீதம்பாளையம், எலத்தூர், உஞ்சலூர். சென்சஸ் கிராமங்கள்-456. பஞ்சாயத்து கிராமங்கள்–343.

**வருவாய் நிர்வாகம்** : கோட்டம்–3: ஈரோடு, கோபிச்செட்டிபாளையம், தாராபுரம். வட்டங்கள் 7 : ஈரோடு, பெருந்துறை, பவானி, கோபிச்செட்டிப்பாளையம், சத்தியமங்கலம், தாராபுரம், காங்கேயம்,

சட்டசபைத் தொகுதிகள்–10: வெள்ளக்கோவில், காங்கோயம், மொடக்குறிச்சி, பெருந்துறை, ஈரோடு, பவானி, அந்தியூர், கோபிச்செட்டிப்பாளையம், பவானிசாகர், சத்தியமங்கலம்

பாராளுமன்றத் தொகுதி : 1 ஈரோடு

மொழி : தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு மற்றும் உருது

காடுகள் : 2,28,749 ஹெக்டேர்

மழையளவு வருட சராசரி - 660.10 ம.மீ

ஆறுகள் : காவிரி, நொய்யல், பவானி, அமராவதி

ஏரிகள் : ஆடத்துறை, அப்பரிக்குடல், சென்னம் பட்டி, முராளி, தண்ணீர்ப்பள்ளம், கடும்பாறைப் பள்ளம், வெள்ளோடு

அணைக்கட்டுகள் : பவானி சாகர், வரட்டுப்பள்ளம், குண்டேரிப்பள்ளம், கொடிவேரி, ஒரத்துப்பள்ளம், உப்பாறு, காளிங்கராயன் அணைக்கட்டுகள்.

முக்கிய விளைகள் : நெல், நிலக்கடலை, மஞ்சள், கரும்பு, சோளம், பருத்தி, புகையிலை, எள்.

புகைவண்டி நிலையங்கள் : ஈரோடு, ஈங்கூர், பெருந்துறை, ஊத்துக்குளி, ஊஞ்சலூர் கொடுமுடி, பாசூர்.

புராதனச் சின்னம் : பெருந்துறை, விஜயமங்கலம்

வழிபாட்டிடங்கள் ": பண்ணாரி மாரியம்மன் கோவில், பவானி சங்கமேஸ்வரர் கோவில், சென்னிமலை முருகன் கோவில், கொடுமுடி வீர நாராயணப்பெருமாள் கோயில், பாரியூர் அம்மன் கோயில், சிவன் மலை, ஈரோடு பெரிய மாரியம்மன்கோவில், திண்டல்மலை முருகன் கோவில்.

சுற்றுலாத்தலங்கள் : பவானிசாகர் அணை, கூடுதுறை, கொடி வேரி அணை, நாளவாடி மலை, கொடுமுடி.

விழாக்கள் : ஈரோடு மாரியம்மன் பண்டிகை, பண்ணாரி மாரியம்மன் பண்டிகை, அந்தியூர் குருநாதசாமி தேர்த்திருவிழா, சென்னிமலை தைப்பூசத் திருவிழா, சிவன் மலை தேரோட்டம், பாவனி கூடுதுறை ஆடிப்பெருக்கு

குறிப்பிடத்தக்கோர் : தீரன் சின்னமலை, நரேந்திரத்தேவர், ஈ.வெ.இராமசாமி.

சிறப்புச் செய்திகள் : நகர வளர்ச்சியில் தமிழகத்தின் இரண்டாவது பெரிய நகர். ஈரோடு துணி மார்க்கெட் இந்திய அளவில் ஐந்தாமிடம். இங்கு பால் பண்ணைத் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. துணி உற்பத்தி மற்றும் பவானி ஜமக்காளம், பெருமளவில் மஞ்சள் உற்பத்தி, பவானி சாகர் அணைக்கட்டு, தீரன் சின்னமலை பிறந்த மாவட்டம், ஆடிமாத புகழ் பெற்ற குதிரைச் சந்தை.

மாவட்டத்தின் முக்கிய வியாபாரம் : மஞ்சள், சர்க்கரை, பருத்தி, சமையல் எண்ணெய், தோல் பொருட்கள், முட்டைப் பொடி

நன்றி : மனோரமா இயர்புக் 2009

❖❖❖❖

# கோயம்புத்தூர்

| | |
|---|---|
| தலைநகர் | கோயம்முத்தூர் |
| பரப்பு (ச.கி.மீ) | 7,470 |
| மக்கள் தொகை (2001) | 42,72,856 |
| கிராம மக்கள் தொகை | 14,51,653 |
| நகர மக்கள் தொகை | 28,20,203 |
| மக்கள் நெருக்கம் | 963 |
| ஆண் பெண் விகிதம் | 572 |
| எழுத்தறிவு பெற்றோர் | 29,45,278 |
| சாகுபடியாளர்கள் | 1,80,601 |
| விவசாயக் கூலிகள் | 3,98,903 |
| வெப் | www.coimbatore.tn.nic.cin |

**அமைவிடம்** : இதன் வடக்கு மற்றும் கிழக்கில் ஈரோடு மாவட்டமும், மேற்கிலும் தெற்கிலும் மேற்குத் தொடர்ச்சி மற்றும் ஆனைமலைத் தொடரும் எல்லைகளாக அமைந்துள்ளன.

புவியியல் அமைவு : அட்சரேகை : 10.10-11.0 N : தீர்க்கரேகை : 76.40, 77.30 E.காலநிலை அதிகபட்சம் 39$^0$C:குறைந்தபட்சம் 24.3$^0$C

வரலாறு : சங்க காலத்தில் கொங்கு நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. 1799 இல் திப்பு சுல்தானின் வீழ்ச்சிக்குப் பிறகு, கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆதிக்கம். இந்தியா சுதந்திரம் அடையும் வரை இது ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குள்ளேயே இருந்தது.

உள்ளாட்சி நிர்வாகம் : மாநகராட்சி–1, கோயம்புத்தூர் நகராட்சி–4, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, திருப்பூர், உடுமலைப்பேட்டை. ஊராட்சி ஒன்றியங்கள்–19, காரமடை மதுக்கரை, பெரியநாயக்கன் பாளையம், சர்க்கார் சாமக்குளம், தொண்டாமுத்தூர், அன்னூர், அவிநாசி, பல்லடம், பொங்கலூர், சூலூர், சுல்தான்பேட்டை, திருப்பூர், ஆனமலை, குடிமங்கலம், கிணத்துக்கடவு, மடத்துக்குளம், பொள்ளாச்சி, பொள்ளாச்சி தெற்கு, உடுமலைப்பேட்டை. பேரூராட்சிகள்–59, மதுக்கரை, வால்பாறை, குனியாமுத்தூர், கோட்டூர், பல்லடம், சூலூர், இருகூர், அன்னூர், சிறுமுகை, அவினாசி, காரமடை, குறிச்சி,

பெரியநாயக்கன் பாளையம், துடியலூர், வெள்ளகிணறு, வேட்டைக்காரன்புதூர் சரவணம்பட்டி, கவுண்டம்பாளையம், கூடலூர், கலப்பட்டி, வேலம் பாளையம், கருமந்தம்பபட்டி, மதுக்குளம், ஆனமலை, வடவள்ளி, வெள்ளலூர், சாமின் உதுக்குளி, இடையகுளம், பெரிய நெகமம், கொமரலிங்கம், ஒத்தக்கல் மண்டபம், தலியூர், புள்ளுவம்பட்டி சர்க்கார் சாமகுளம், பேரூர், சின்னவேடம்பட்டி, வீர கேரளம், பள்ளப்பாளையம், கணியூர், கிணத்துக்கடவு, கண்ணம்பாளையம், நரசிம்ஹநாயக்கன்பாளையம், வேடப்பட்டி, சூலேஸ்வரம்பட்டி, இக்கரைப்புள்ளுவன்பட்டி, சமதூர், நல்லூர், வீரபாண்டி, சமலபுரம், தளி, சங்கரம நல்லூர், செட்டிப்பாளையம், தொண்டாமுத்தூர், எட்டமடை, தென்கரை, ஆலந்துரை, இடிக்கரை, திருமலையம்பாளையம், திருமுருகன்பூண்டி, மோப்பிரிப் பாளையம் : சென்சஸ் கிராமங்கள் **415.** பஞ்சாயத்து கிராமங்கள்-**389.**

வருவாய் நிர்வாகம் : கோட்டங்கள்–**3:** பொள்ளாச்சி, திருப்பூர் கோவை. வட்டங்கள்–**9:** பல்லடம், அவிநாசி, கோவை வடக்கு, கோவை தெற்கு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, வால்பாறை, உடுமலைப்பேட்டை, திருப்பூர்.

சட்டசபைத் தொகுதிகள் - 15 : மேட்டுப்பாளையம், அவிநாசி, தொண்டாமுத்தூர், சிங்காநல்லூர், கோயம்புத்தூர் மேற்கு, கோயமுத்தூர் கிழக்கு, பேரூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, வால்பாறை, உடுமலைப்பேட்டை, தாராபுரம், பொங்கலூர், பல்லடம், திருப்பூர்.

பாராளுமன்றத் தொகுதிகள் : கோயம்புத்தூர், பொள்ளாச்சி, திருப்பூர்.

மொழி : தமிழ், கன்னடம், மலையாளம், உருது மற்றும் தெலுங்கு.

மழையளவு : வருட சராசரி, **647 2** மி.மீ.

ஆறுகம் : சிறுவாணி, அமராவதி

முக்கிய விளைகள் : காய்கறிகள், நெல், வாழை, கரும்பு, பூக்கள்.

வழிபாட்டிடங்கள் : வெள்ளியங்கிரி சிவன், போரூர் பட்டீஸ்வரன், மருதமலை முருகன், ஈச்சனாரி வினாயகர், மேட்டுப்பாளையம் சிவன்கோயில், பூண்டி முருகன் ஆலையம்.

சுற்றுலாத் தலங்கள் : சிறுவாணி அணை, பெரியார் அருவி, டாப் சிலிப் (ஆணைமலை) வால்பாறை, அமராவதி அணை.

சிறப்புகள் : தென்னிந்தியாவின் மான்செஸ்டர். பங்குச் சந்தை ஒன்று செயல்பட்டுவருகிறது.

நன்றி : மனோரமா இயர்புக் **2009**

❖❖❖❖

# வானம் தொடலாம் வாங்க

சிந்தனைக் கவிஞர் கவிதாசன்

**எல்லோரையும் விட சிறப்பாக இருக்க என்ன வழி** ?

எதைச் செய்தாலும் சிறப்பாகச் செய்யவேண்டும் என்ற எண்ணம் எப்பொழுதும் மனதில் இருக்க வேண்டும். எதையும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணமே ஒருவரை எந்த வேலையையும் சிறப்பாகச் செய்யத் தேவையான திறமைகளை கற்றுக்கொள்ளத் தூண்டுகிறது.

ஆகவே எதைச் செய்தாலும் சிறப்பாகச் செய்ய முயற்சியும், பயிற்சியும் எடுத்துக்கொள்ளுங்கள். முயற்சியும், பயிற்சியும், தொடர்ச்சியாக இருந்தால் சாதாரண மனிதனும் சாதனை மனிதனாக முடியும். சின்னச் சின்ன பணிகளைச் சிறப்பாகச் செய்யும் போது பெரிய பொறுப்புகள் உங்களைத் தேடி வரும்.

**வெற்றி, தோல்விகளில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்ன**?

வெற்றி உன்னை வெளி உலகிற்கு அடையாளம் காட்டுகிறது. ஆனால் தோல்விதான் உன்னை உனக்கே அடையாளம் காட்டுகின்றது. வெற்றியின் மூலம் கிடைக்கும் பரிசுகளைவிட தோல்விகள் மூலம் கற்றுக்கொள்ளும் பாடங்களின் மதிப்பு உயர்ந்தவை.

மேலும் எதைச் செய்தால் வெல்லலாம் என்பதை வெற்றியில் இருந்தும், எதைச் செய்யத் தவறினால் தோற்போம் என்பதைத் தோல்வியிலிருந்தும் கற்றுக்கொள்ளலாம். அத்தோடு வெற்றியையும் தோல்வியையும் தீர்மானிப்பது உழைப்பும், முயற்சியும்தான் என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும். தொடர்ந்து முயலவில்லை என்றால் வெற்றி நிலையானது அல்ல. தொடர்ந்து முயன்றால் தோல்வியும் நிலையானது அல்ல. உழைப்பும் முயற்சியும் உயிருள்ளவரை வேண்டும்.

**வாழ்வின் குறிக்கோள்களைத் தீர்மானிக்க எந்த வயது ஏற்றது**?

வாழ்வின் குறிக்கோளைப் பள்ளியில் படிக்கும்போதே தீர்மானித்துக்கொள்வது நலம். ஏனென்றால் குறிக்கோளுக்குத் தக்கவாறு பொருத்தமான பாடங்களை மேற்கொண்டு படித்து, குறிக்கோளை அடைந்து மகிழலாம்.

அதாவது இருபது வயதுக்குள்ளாக இதுதான் வாழ்வின் குறிக்கோள் என்பதைத் தீர்க்கமாகத் தீர்மானித்துக் கொண்டு, 50 வயதுக்குள்ளாக இலட்சியத்தின் சிகரத்தில் வெற்றிக்கொடி நாட்ட வேண்டும். அதன் பின்னர் அடைந்துள்ள வெற்றியை மற்றவர்களுக்கு வழங்கி மகிழ வேண்டும். அப்பொழுதுதான் வாழ்வின் பொருள் புரியும். மனித வாழ்க்கையின் மகத்துவத்தை உணர முடிவும். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை என்பது இலக்கில்லாத பயணம்.

**சில சமயங்களில் நல்ல நண்பர்கள் கூட படிப்பு போன்ற இலட்சியங்களை அடைய தடையாக இருக்கின்றனர். எப்படித் தவிர்ப்பது?**

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு நல்ல நண்பர்களின் ஒத்துழைப்பு அவசியம். அதாவது உங்களுடைய உழைப்பும், மற்றவர்களின் ஒத்துழைப்பும்தான் உங்களை வெற்றிச் சிகரத்திற்கு அழைத்துச் செல்கின்றது. உப்பில்லாமல் கூட உயிர் வாழலாம். ஆனால் நல்ல நட்பில்லாமல் உயிர் வாழ முடியாது. என்றாலும் நண்பர்களோடு கலந்திருக்கலாம். கரைந்துவிடக் கூடாது. நமது இலட்சியத்தை மறந்துவிடக்கூடாது.

நண்பர்களின் உதவியைப் பயன்படுத்தி நீங்கள் உயர வேண்டும் அதேபோல் அவர்கள் உயர்வதற்கு நீங்கள் உதவவேண்டும். அவ்வாறு இல்லாமல் நீங்கள் படிப்பதற்கும் முன்னேறுவதற்கும் தடையாக நண்பர்கள் இருக்கின்றார்கள் என்றால், அவர்களை நண்பர்கள் என்று என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் நன்மை செய்பவர்களே நண்பர்கள்; அவ்வாறு நமது முன்னேற்றத்திற்குப் படியாக இல்லாமல் தடையாக இருக்கும் நட்பைத் தகர்த்து விட்டு முன்னேற வேண்டுமே தவிர, அவர்களைக் குறை கூறிக்கொண்டு நமது வாழ்க்கையை வீணடித்துவிடக் கூடாது.

**எண்ணங்களைச் சீரமைப்பது எப்படி ?**

மனிதனை முன்னேற்றுவதும் அவனைப் பின்னுக்குத் தள்ளுவதும் அவனுடைய எண்ணங்கள்தான். இதைத்தான் நமது முன்னோர்கள் மனம் போல் வாழ்வு என்றார்கள்.

நமது மனதில் தோன்றும் எண்ணங்களே நமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறது. ஆகவே எப்பொழுதும் மனதில் தூய எண்ணங்களுக்கு மட்டுமே வாய்ப்புக் கொடுக்க வேண்டும். என்றாலும் பல்வேறு காரணங்களால் நமது மனதில் தீய எண்ணங்கள் தோன்றுவது இயற்கையே.

அவ்வாறு தீய எண்ணங்கள் தோன்றும் போது, நாம்தான் விழிப்போடு செயல்பட்டு,

அத்தகைய தீய எண்ணங்களை செயலாக்காமல் ஆரம்பத்திலேயே அடக்கிவிட வேண்டும். எது தீய எண்ணம்? எது நல்ல எண்ணம்? என்று எவ்வாறு கண்டுபிடிப்பது என்று நீங்கள் கேட்பது எனக்குத் தெரிகின்றது.

நல்ல மனிதர்கள் நான்கு பேர்களிடம் பகிர்ந்து கொள்ளத் தகுதியில்லாத எல்லா எண்ணங்களும், தீய எண்ணங்கள்தான். ஆகவே மனதில் தோன்றும் எண்ணங்களைப் பற்றி எண்ணிப்பார்த்தால் போதும். எது நல்ல எண்ணம்? எது நஞ்சு எண்ணம்? என்பது உங்களுக்குப் புரியத் தொடங்கிவிடும். இதைத்தான் மகாகவி பாரதி “நல்ல எண்ணம் வேண்டும்” என்றார். கரும்புத் தோட்டத்தில் முளைக்கின்ற நெல் கூட களைதான்.

**படிக்க ஆசை உள்ளது. ஆனால் முடிவதில்லை. மறந்து விடுகிறது. என்ன செய்வது?**

ஒருவருடைய வாழ்க்கையை ஒளிமயமாக மாற்றுவது கல்வி. கல்வியின் வேர்கள் கசப்பானவை; ஆனால் அதன் கனிகள் இனிப்பானவை. எதிர்காலத்தில் சாதனை படைக்கவே இன்று நான் படிக்கின்றேன் என்ற உணர்வோடு பாடங்களை நன்கு புரிந்து படியுங்கள். திரும்பத் திரும்பப் படியுங்கள். மனித மூளை ஒருபுறம் எழுத்து வடிவங்களையும், மறுபுறம் படங்கள் போன்றவற்றையும் நினைவில் கொள்கிறது. எனவே பாடங்களைப் படிக்கும்போது வரைபடங்களுடன் படிக்க வேண்டும். தேர்வின்போது வரி வடிவமோ அல்லது பட வடிவமோ நினைவிற்கு வந்து அனைத்து பதில்களும் ஞாபகம் வந்து விடும்.

முடியாது என்பது மூடத்தனம், முடியும் என்பதே மூலதனம். முயற்சி செய்யுங்கள், முயற்சியே முதல் வெற்றி.

**ஒருவர் நல்ல நிலையினை அடைய என்ன செய்ய வேண்டும்?**

நல்ல நிலையை அடைய பின்வரும் பத்துக்கட்டளைகளைத் தவறாது கடைப்பிடித்தல் வேண்டும்.

1. அதிகாலை ஐந்து மணிக்கு முன்னர் விழித்தெழவேண்டும்.
2. போதிய உடற்பயிற்சிக்குப் பின்னர், திட்டமிட்டபடி நன்கு உழைக்கவேண்டும்.
3. எதையும் ஈடுபாட்டுடன், நமது முழுத்திறமையையும் வெளிப்படும் விதத்தில் செயல்பட வேண்டும்.
4. எல்லோருடனும் நன்கு பழகும் தன்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.
5. நல்ல பழக்கங்களை வளர்த்துக்கொள்வதோடு தீய பழக்கங்கள் நம்மை அணுகாது பார்த்துக்கொள்ளவேண்டும்.

6. தன்னம்பிக்கையோடும் உற்சாகத்தோடும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
7. மனித நேயத்தோடு பிறருக்கு உதவும் பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.
8. நமக்கு உதவியவர்களுக்கு எப்பொழுதும் நன்றியுடையவர்களாகத் திகழ வேண்டும்.
9. நேரத்தைச் சரியாக திட்டமிட்டுப் பயன்படுத்தவேண்டும்.
10. எப்பொழுதும் உழைத்துக்கொண்டே இருக்க வேண்டும்.

❖❖❖❖



## வருந்துகிறோம்

திருமதி K.C.ராஜேஸ்வரி

தோற்றம் : 13-08-1930 மறைவு : 20-12-2009

W/o. K.M.சொக்கலிங்கம், பார்வதி விலாஸ்

கள்ளிப்பட்டி, கோபி வட்டம், ஈரோடு மாவட்டம் - 638 503

கள்ளிப்பட்டி தெய்வத்திரு. K.R.முருகேசகவுண்டர் மகன் திரு. K.M.சொக்கலிங்கம் அவர்கள் மனைவியும், ஈங்கூர் தெய்வத்திரு. E.V.வெங்கமா கவுண்டர் பேத்தியும், தெய்வத்திரு. E.V.குமாரசாமி கவுண்டர் மகளுமான திருமதி. K.C.ராஜேஸ்வரி அவர்கள் 20-12-2009 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். சிறந்த பெண் விவசாயி என்று நம் கொங்கு சமுதாயத்தில் பெயர் பெற்றவர். அன்னதானத்தில், கோயில் காரியங்களில் தனி சிறப்பு பெற்றவர்

| | |
|---|---|
| கணவர் | திரு. K.M.சொக்கலிங்கம் |
| கணவரின் சகோதரர்கள் | திரு. K.M.சுந்தரமூர்த்தி M.B.A., |
| | திரு. K.M.மாணிக்கவாசகம் அமர்ஜோதி டிரேடர்ஸ், சென்னை |
| | திரு. K.M.வாசுதேவன் B.E., |
| | Retd. Member and Chief Engineer TNEB, Chennai |
| மகன்கள் | Dr. K.C.கதிர்வேல் |
| | K.C.பிரபாகரன் |
| மகள் | திருமதி. NKC லலிதா, ஓடத்துறை |
| பேரன்கள் | K.குமார் முருகசேன் கோவை, MIB |
| | N.K.விஷ்ணுவர்த்னன், அட்வகேட், ஈரோடு |
| பேத்திகள் | திருமதி சுபாஷினி ரவீந்திரன் |
| | திருமதி டாக்டர் சம்யுக்தா, |
| | திருமதி. சரண்யா அருண் (USA) |

அம்மையாரின் குடும்பத்தாருக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖

# ஏன் கார் பயணத்தின் பொழுது கட்டாயம் சீட் பெல்ட் அணிய வேண்டும்?

இன்றைய காலகட்டத்தில் வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் சராசரி வேகம் மிகவும் அதிகரித்துள்ளன. ஆதலால் இயற்கையாகவே வாகன விபத்துக்களும் எண்ணிக்கையில் அதிகரித்துள்ளன

**ஏன் அணிய வேண்டும்**?

ஒரு கார் 100 கி.மீ. வேகத்தில் செல்கின்ற பொழுது, அதில் பயணிப்பவர்களும் அதே 100 கி .மீ வேகத்தில் தான் சென்று கொண்டிருக்கிறார்கள். அறிவியலில் கூறப்படும் இனர்சியா (Inertia) என்ற பண்பு இங்கு நமக்கு விளக்குவது என்னவெனில் வாகனத்தின் Inertia வும், பயணிப்பவர்களின் Inertia வும் முற்றிலும் சம்பந்தம் அற்றவை. (Totally Independent of each other)

அந்த வாகனம் ஏதாவது மற்றொரு வாகனத்திலோ, மரத்திலோ அல்லது ஏதோ ஒரு வகையிலோ இடிக்கும் பொழுது திடீரென 100 கி.மீ லிருந்து 0 கி.மீ க்கு வருகிறது.

அந்த வாகனம் பெரிய சேதத்தை தமக்கு ஏற்படுத்திக்கொண்டுதான் அந்த 0 கி.மீ. வேகத்தில் ஓட்டம் முடிவடைகிறது.

அதில் பயணிப்பவர்கள் சீட்பெல்ட் அணியாமல் இருந்தால், முன் கண்ணாடியிலோ, ஸ்டியரிங்கிலோ (Steering Wheel) அல்லது வெளியே சாலையிலோ தூக்கி வீசப்பட்டு, அந்த 100 கி.மீ. வேகத்திலிருந்து 0 கி.மீ. வேகத்தினை அடைகின்றனர். பெருத்த சேதத்தைத் தமக்கு ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

இதுவே Inertia என்ற பண்பின் விளைவாகும்.

சீட்பெல்ட், அணிந்திருந்தால் அந்த Force என்பது நமது உடம்பில் எலும்புகள் இருக்கும் பகுதியில் (Rib Cage, Pelvischip) ஒரு குறிப்பிட்ட நெடிய காலப்பகுதியில் மெதுவாக அழுத்தப்படுகிறது. (Seat Belt applies stopping force to more durable parts of the body over a longer period of time)

இதனால் பல காயங்கள் வருமுன் காக்கப்படுகின்றன.

1. தலை, மூளை காயங்கள் (Head, Brain Injury Face)

2. முதுகு தண்டுவடம், (Spinal card Injury)

3. முதுகெலும்பு காயங்கள் (Spine injury)

4. மார்பு காயங்கள் (Chest, Lung injury)

**5.** வயிறுகுடல்பகுதி காயங்கள் (Abdomen injury). சிதம்பரம் மருத்துவமனையில் சில மாதங்கள் முன்பு ஒரு லாரி ஓட்டுநர் விபத்திற்குப்பிறகு இதே காயத்துடன் (Abdomen Blunt Injury) வந்தார். அவருக்கு அறுவை சிகிச்சை செய்தோம். பின்பு குடல் வெடிப்பு சரி செய்யப்பட்டது.

**6.** மூட்டு காயங்கள் (Knee injury)

**7.** உடம்பில் எந்தப் பகுதியிலும் ஏற்படும் காயங்கள். (தோலில், தசையில்)

ஆகவே வாகனங்களில் சீட்பெல்ட் அணிவது ஓர் உயிர் காக்கும் செயலாகும். மிகவும் அவசியமானதாகும்.

**சீட் பெல்ட் அணியும் சரியான முறை**

இரண்டு பகுதி உள்ளது.

Shoulder Belt - மார்பு பகுதியை கடந்து அணியப்படுகிறது,

Lap Belt - இடுப்புப் பகுதியில் அணிய வேண்டும்.

**சரியான முறை** :-




**My Own Experience** :-

This June 09, I met with a Road traffic accident. (Car Jammed into a tree) The front Portion of the car was totally damaged. If I were not wearing seat belt that day, I would not be writing this article today. Please take care. Please wear seat belt without fail and also insist your relatives and friends to wear the seat belt.

Dr. Pravin. C
MS (General Surgery)
E-mail : pravinchandran@gmail.com
Cell : 93823 21880

❖❖❖❖

# கொங்கு இளம் சாதனையாளர்



**எஸ்.சுஜிதா**

கோவை மாவட்டம், ராமநாதபுரம் திரு. எம்.செந்தில் குமார் – திருமதி எஸ்.இந்திராணி தம்பதியரின் மகள் செல்வி எஸ்.சுஜிதா. இவர் செம்பூத்தன் குலத்தைச் சேர்ந்தவர்.

இவர் கராத்தே மற்றும் ஜீடோ கலைகளில் 15 வயதிற்குட்பட்ட மகளிர் பிரிவில் சர்வதேச அளவில் இலங்கையில் நடைபெற்ற போட்டியில் கட்டா பிரிவில் முதல் இடத்திலும், குமுத்தே பிரிவில் 2ம் இடத்திலும் வெற்றி பெற்றுள்ளார். அதே போல் சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச போட்டியிலும் கட்டா பிரிவில் முதல் இடத்திலும், குமுத்தே பிரிவில் இரண்டாம் இடத்திலும் வெற்றி பெற்றுள்ளார். மேலும் வருகின்ற ஆகஸ்ட் 2009ல் 150 நாடுகள் பங்கு பெறும் சர்வதேச கராத்தே போட்டி சீனாவில் நடைபெற உள்ளது. இவர் இப்போட்டியில் கலந்து கொள்ள தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதைத் தவிர இவர் தேசிய அளவிலும், மாநில அளவிலும் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றதோடு, பரிசுகளையும் பதக்கங்களையும் குவித்துள்ளார்.

இவர் கோவை பீளமேடு பி.எஸ்.ஜி.சர்வஜன மேல்நிலைப்பள்ளியில் +1 படித்து வருகிறார்.

கொங்கு குலப்பெண்மணிகள் விளையாட்டுத்துறையிலும் வியத்தகு சாதனைகள் செய்து வருவது மகிழ்ச்சியை அளிக்கிறது. இவரது சாதனை உலக அளவில் விரிய வாழ்த்தி சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் “கொங்கு இளம் சாதனையாளர்” விருது வழங்கிப் பாராட்டியது.

❖❖❖❖❖

# வாழ்த்துகிறோம்



நம்பியூர் அருகிலுள்ள இடையான் குட்டை தோட்டம் கிராமத்தைச் சேர்ந்த திரு. P.பொங்கியண்ணன் - திருமதி வசந்தாமணி தம்பதியரின் மகள் செல்வி P.இனியா நம்பியூர் குமுதா மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியில் +1 படித்து வருபவர். இவர் படிப்பில் மட்டுமல்ல, விளையாட்டுப் போட்டிகளிலும் சாதனை படைத்துள்ளார்.

இந்திய அரசின் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அமைச்சகம் சார்பில் 2வது தேசிய அளவிலான ஊரக விளையாட்டுப்போட்டிகள் குரூப் 1 (PYKKA) சென்னையில் நவம்பர் 21 முதல் 24 முடிய நடைபெற்றது.

அதில் P.இனியா 4x400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்டு தேசிய அளவில் முதலிடத்தைப் பெற்று தங்கம் வென்றார். முன்னதாக ஈரோட்டில் நடைபெற்ற மாவட்ட அளவிலான போட்டிகளில் வென்ற இவர், பின்னர் மாநில அளவிலான போட்டிகள் சென்னையில் நடைபெற்றதில் அதிலும் வெற்றிபெற்றார். அதன் பின்னர் தமிழ்நாடு அணி சார்பில் இந்திய தேசிய அளவில் சென்னையில் நடைபெற்ற போட்டிகளில் 21 மாநிலங்கள் கலந்து கொண்ட போட்டிகளில் மாணவி P.இனியா கலந்துகொண்டு தங்கப்பதக்கம் வென்று தமிழ்நாட்டிற்கும், குறிப்பாக கொங்கு சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்து உள்ளார்.

மாணவி P.இனியாவை ஊக்கப்படுத்தி, சாதனை புரிய வைத்துள்ள குமுதா கல்வி நிறுவனங்களின் தாளாளர் K.A.ஜனகரத்தினம், துணைத்தாளாளர் - சுகந்தி ஜனகரத்தினம், செயலர் டாக்டர் J.அரவிந்தன், முதல்வர் மஞ்சுளா மற்றும் தலைமையாசிரியை வசந்தி ஆகியோரைச் சங்கம் பாராட்டுகிறது.

இளம் வீராங்கனை இனியா மேலும் பல சாதனைகள் படைக்க சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறது.

❖❖❖❖

# மணமகள் தேவை

ஆந்தை கூட்டம், 29 வயது, படிப்பு MBA (UK). சுவாதி, 4ம் பாதம் செவ்வாய், இல்லை. உயரம் 5'5'' சிகப்பு நிறம்; உடன் பிறப்பு 1 தம்பி; கோயமுத்தூர்; சொந்தமாகத் தொழில் செய்யும் பாரம்பரியப் பெருமை கொண்ட வசதியான வரனுக்குத் தகுதியான பெண் தேவை.

தொடர்ப்புக்கு :
டி.கே.சுப்ரமணியன்
கொங்கு திருமணமாலை, திருமணத் தகவல் மையம்,
60, மேகசின்சாலை, பட்ரோடு, பரங்கிமலை, சென்னை - 600 016
Ph : 044-22311411, 9840364348

❖❖❖❖